## மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.02.11 சபையமர்வு அறிக்கை

2022.02.11ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும். அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

2022.01.12 சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாதம் 29ம் திகதி மத்திய மாகாண கௌரவ ஆளுனரினால் கொவிட் - 19 தடுப்பூசியினை இதுவரையிலும் பெறாமல் இருப்பவர்களுக்கு கௌரவ உறுப்பினர்களினூடாக அறிவித்தல் வழங்குமாறு கூறியிருந்தார். எனவே அந்தந்த கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள இதுவரையிலும் 03வது கொவிட் - 19 தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளாதவர்களக்கு அறிவித்தல்களை வழங்குமாறு கௌரவ உறுப்பினர்களை கேட்டுக்கொள்கின்றேன். அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - கௌரவ உப தவிசாளர் பி.பி.பிரதீபன் அவர்கள் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2022.02.11ம் திகதி சபையமர்விற்கான விடுமுறை கடிதம்.

**தீர்மான இல 01**

கௌரவ உப தவிசாளர் அவர்களின் விடுமுறைக்கு சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 02**

**அனுப்புனர்** - கௌரவ உப தவிசாளர் பி.பி.பிரதீபன் அவர்கள் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2022ம் ஆண்டிற்கான குழுக்களில் இணைத்துக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாத சபையமர்வின் போது 2022ம் ஆண்டுக்கான புதிய குழு உறுப்பினர்கள் இணைக்கப்பட்டனர். அச்சந்தர்ப்பத்தில் தனது தனிப்பட்ட காரணங்களினால் அவரை எந்த குழுக்களிலும் இணைத்துக்கொள்ள வேண்டாமென உப தவிசாளர் அவர்கள் கூறியிருந்தார். அத்துடன் 2022ம் ஆண்டுக்கான வரிபணம் அறவிடும் விடயத்திற்கு கூட அவர் எதிர்ப்பை தெரிவித்திருந்தார். மீண்டும் அவர் கடிதமனுப்பியுள்ளதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயத்திற்கு நான் எனது எதிர்ப்பை தெரிவித்துக்கொள்கின்றேன். சபையில் வேறு வகையாக பேசிவிட்டு கடிதத்தில் வேறு விதத்தில் கூறியுள்ளார்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உப தவிசாளர் குழுக்களில் இணைய வேண்டுமானால், கடந்த சபையில், சபை கட்சி, இன, நிறம் சார்பாக நடக்கின்றது என்று கூறிய விடயங்களையும் அவர் திருப்பிப்பெற வேண்டும். மேலும் கடந்த சபையில் நடைபெற்ற அனைத்து விடயங்களும் சரியென அவர் இந்த சபையில் கூற வேண்டும். அதன் பின்னர் அவரை குழுக்களில் இணைப்பது தொடர்பாக பார்க்கலாம். ஊடகங்களில் ஒரு மாதிரியும் கடிதத்தில் வேறுமாதிரியும் கூறியுள்ளார். இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இது சபையின் அவமதிப்பது போல உள்ளது. இந்த ஊடகங்களுக்கு முன் சபையின் அனைத்து விடயங்களுக்கும் நான் ஆதரவை வழங்குகின்றேன். தவறான விடயங்கள் சபையில் நடைபெறவில்லை என்பதனை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளர் அவர்கள் எத்தனை முறை சபைக்கு வந்துள்ளார் எத்தனை முறை தங்களின் வேலைப்பளுவினை ஏற்றுள்ளார், வேலையை பிரித்துக்கொடுக்காமல் எவ்வாறு சபைக்கு வருவதென அவர் கேட்கின்றார்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நான் வெளிநாடு சென்றிருந்த போது பதில் கடமை ஆற்றியிருந்தார். தவிசாளர் இருக்கும் போது எவ்வாறு வேலையை பிரித்தளிப்பது.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையில் நாங்கள் அனைத்து விடயங்களையும் நிறைவேற்றி விட்டோம். அப்போது எவ்விடயத்திற்கும் ஆதரவளிக்காமல் தற்போது குழுவில் இணைந்துக்கொள்ள கடிதம் அனுப்புவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அன்றைய நிதிக்குழுவின் போது கூட தாங்கள் அவசரமாக கூட்டமொன்றுக்கு செல்லவேண்டியிருந்தமையினால் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்களை குழுவின் தலைவராக நியமித்து விட்டு சென்றீர்கள் அன்றைய தினம் உப தவிசாளர் அவர்கள் இல்லை தானே? அவர் குழுவில் இருந்திருந்தால் அவரை குழுவின் தலைவராக நியமித்திருக்கலாம் தானே?

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உப தவிசாளர் அக்குழுவிற்கு பொருத்தமற்றவர். அவர் அனுப்பியுள்ள கடிதத்தை குழுவிலிருக்கும் கௌரவ உறுப்பினர்கள் எஸ். சுரேஸ்குமார், கே.நித்தியானந்தன் அவர்கள் நிராகரிக்கின்றனர். எனவே தற்போதுள்ள குழுவின்படி கொண்டு செல்லவும்.

**தீர்மான இல 02**

கௌரவ உப தவிசாளர் சபையமர்விற்கு வருகை தரும் நாளில் இக்கடிதம் தொடர்பாக தீர்மானமெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

**கடித இல 03**

**அனுப்புனர்** - மாவட்ட வைத்தியசாலை – மஸ்கெலியா

**விடயம்** - வைத்தியசாலையின் சுற்றுப்புற சூழலை தூய்மைப்படுத்திக்கொடுத்தமைக்காக நன்றியினை தெரிவித்துள்ள கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம்.

**விடயம்** - உள்ளூராட்சி மன்றங்களின் பெண்கள் சார்ந்த அரசியலின் தரத்தினை உயர்த்தல் வேலைத்திட்டம் தொடர்பான கடிதம்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - வருமான பரிசோதகர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - 2021ம் ஆண்டு கொவிட் - 19 காரணமாக டென்டர்தாரர்களுக்கான நிவாரணத்தை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

கொவிட் தொற்று காரணமாக டென்டர்தாரர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதி தொடர்பில் வழங்கப்படவுள்ள நிவாரணம் தொடர்பான கடிதத்தில் குறிப்பிடப்பிட்டுள்ளவாறு நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதினொரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்தை அண்மித்து தொகையினை சபையினால் அவர்களுக்கு செலுத்த வேண்டி வரும். நாம் இழக்க நேரிடும். பத்து வீதம் செலுத்தினால் 04இலட்சத்தை அண்மித்த தொகை வரும். அவர்களுடைய நியாயத்துடன் சேவைகாலம், யாத்திரை கால ஆரம்பித்தலுடன் தேடிப்பார்த்தால், 04இலட்சத்து எழுபதாயிரத்துடன் கணக்கிட்டால் சபைக்கு இலாபம் ஒன்று இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். எனவே அவ்வாறான சாதாரண தொகைக்கு சென்றால் நன்மையாக அமையும். எனது ஞாபகத்தின்படி கடந்த 2022 ஏப்ரல் மாதம் 20ம் திகதி அளவில் தான் நாடு முடக்கப்பட்டது. அதுவரை யாத்திரை காலமும் ஏனைய செயற்பாடுகளும் நடைபெற்றன. இணைய எனவே பெரிய நிவாரணம் ஒன்றை வழங்குவதனை விட நியாயமான நிவாரணம் ஒன்றை வழங்கினால் சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நூற்றுக்கு பத்து வீதம் சலுகை வழங்கினால் இரு தரப்பினருக்கும் சாத்தியமான விடயமாக அமையும்.

**தீர்மான இல 03**

கொவிட் - 19 அசாதாரண சூழ்நிலைமை காரணமாக 2021ம் ஆண்டுக்கான டென்டர்தாரர்களுக்கு டென்டர் தொகையில் நூற்றுக்கு 10% சலுகை அல்லது நிவாரணம் வழங்க சபை தீர்மானித்தது.

**கடித இல 06**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி திணைக்களம் - மத்தியமாகாணம்.

**விடயம்** - உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலங்களை நீடித்தல் தொடர்பான வர்த்தமானி தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அது தொடர்பில் உறுப்பினர்களுடைய அடையாள அட்டையினை புதிப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 07**

**அனுப்புனர்** - விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்.

**விடயம்** - கொம்போஸ்ட் கொள்கலன்களை பெற்றுக்கொடுத்தல் தொடர்கான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

விசேடமாக மாகாண சபை ஊடாக செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டம் தொடர்பில் நாங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு விசேடமாக வட்டாரத்திற்கு பொறுப்பான உறுப்பினர் என்பது யார் என்பதை தாங்கள் பட்டியல்படுத்த வேண்டும். நாம் வட்டாரத்தில் வெற்றிக்கொண்ட 10 உறுப்பினர்கள் இருக்கின்றோம். அப்போது இந்த கழிவு கூடைகள் எத்தனை வழங்குவது என்ற பிரச்சினை எழுகின்றது. 16 உறுப்பினர்களுக்கும் கிடைக்குமாக இருந்தால் அதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. வட்டார மட்டத்தில் கொடுக்கும் போது வட்டாரத்திற்கு பொறுப்பான உறுப்பினர் அல்லாதவர்களுக்கு எப்படி வழங்குவது என்ற பிரச்சினை உள்ளது. எனவே அது தொடர்பில் பொருத்தமான முறையினை சீக்கிரம்

எடுக்க வேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றேன். அதன்படி வட்டாரத்திற்கு பொறுப்பான கௌரவ உறுப்பினர்களுக்கு உரித்தாகின்ற அல்லது செயலாளர் அவர்கள் கடிதம் குறிப்பிடும் போது முன்னைய வர்த்தமானி தொடர்பில் கூறினார். அவ்வர்த்தமானியிலே வட்டாரத்தில் வெற்றிக்கொண்ட 10 உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் போது ஏனைய அதாவது வட்டாரத்திற்கு பொறுப்பில்லாத உறுப்பினர்களினால் தடை ஏற்படுகின்றது. எனவே இவ்விடயம் தொடர்பில் வரைவான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அரசியல் ரீதியான பிரச்சினைகள் எதுவும் எமக்கு கிடையாது. தத்தமது அரசியலை நடத்தி செல்வதற்கு அவரவருக்கு சுதந்திரம் உள்ளது. இருப்பினும் சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பில் எமக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளன. எனவே வட்டாரத்திற்கு பொறுப்பான உறுப்பினர் என்ற வகையில் எமக்கு உரித்தான இடத்தை பெற்றுத்தருமாறு சபையினை கேட்டுக்கொள்கின்றேன். வட்டார ரீதியில் இல்லாவிட்டால் பிரச்சினை இல்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கொம்போட் கொள்கலன்களை 16 உறுப்பினர்களுக்கும் பெற்றுக்கொடுக்க கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சுகாதார பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் கோரப்பட்டிருந்தன, எனினும் அவை நிதிக்குழு அறிக்கையில் இல்லையே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

குறைவான விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் ஏனைய விலைமனுக்களுக்கு கால அவகாசம் வழங்கப்படுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, எனக்கொரு பிரச்சினை உள்ளது. எதிர்காலத்தில் அதிகளவிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வரவிருப்பதால், அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கிராம அபிவிருத்தி சபைகள், விவசாயம் தொடர்பாக செயற்படும் சங்கங்கள், மாகாண சபை ஊடாக செயற்படுத்தப்படும் சனசமூக நிலையங்கள் போன்ற நிறைய அமைப்புக்கள் காணப்படுகின்றன. எனவே அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் காணப்படும் தொடர்புடைய அனைத்து சங்கங்களையும் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். ஒரே சங்கத்திற்கு அபிவிருத்தி வேலைகள் குவியும் பொழுது பிரச்சினைகள் ஏற்படும். ஒரு சங்கத்திற்கு 5% கிடைக்கும் போது அது பதிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கேற்ப பாவிக்க முடியும். மற்றைய பிரிவிற்கு அது பதிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கே பாவிக்க முடியும். மற்றைய பிரிவிற்கு அது தொடர்பில் எதுவும் செய்ய முடியாது. எனவே எதிர்காலத்தில் கிடைக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உரிய சங்கங்களுக்கு பிரிந்து செல்லும் வகையில் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். எதிர்காலத்தில் எமக்கு அதை முன்மொழிய முடியும். பொது வேலைத்திட்டத்திற்காக உரிய கிராம சேவகர் பிரிவில் அல்லது தோட்டத்தில் இச்சங்கத்தின் ஊடாக சிரமதானம் ஒன்று செய்வதானால் இந்த சங்கத்தை இணைத்துக்கொண்டு செய்வதென்றால் ஒரு தொகை பணத்தை பெற்றுக்கொள்ள வசதிகள் உண்டு. அவ்வாறான யோசனைகள் இல்லையெனில் பிரதேச செயலாளர் ஊடாக ஆலோசனை பெற்று தரலாம். அல்லது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக பெற்றுக்கொடுத்தால் நன்றாக இருக்குமென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சில கிராம அபிவிருத்தி சங்கங்கள் குறிப்பிட்ட நபர்கள் இருக்கும் காலம் வரை முறையாக செயற்படும். அவர்கள் விலகிய பின்னர் வேறு வகையாக செயற்படுகின்றது. அதனால் தான் சில அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்காமல் இருந்தோம், இனிவரும் சந்தர்பங்களில் அனைவருக்கும் வழங்குவோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சிவனொளிபாதமலை பருவகாலத்தில் வாகன தரிப்பிடத்திற்கான வருமானத்தை வருமான அறிக்கையில் தனியாக பிரித்து காட்டவும். செலவறிக்கையில் ஒவ்வொரு விபரங்களுக்கு காரியாலய உத்தியோகத்தர்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே அவ்வாறு இல்லாமல் குறித்த கடையின் பெயரை குறிப்பிடவும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சாமிமலை நீர் விநியோக திட்டத்திற்கு ஒவ்வொரு கொடுப்பனவு அறிக்கையிலும் செலவுகள் செய்யப்படுகின்றது. கடந்த 02 சபைகளிலும் இது தொடர்பாக நான் முன்மொழிவுகளை செய்திருந்தேன். இந்த நீர் விநியோக திட்டத்திலுள்ள உண்மையான குறைபாடுகளை ஆராய்ந்து அதற்கான ஒரு தொகையை ஒதுக்கி இத்திட்டத்தை முழுமையாக சீரமைத்துக்கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லா செலவறிக்கைகளிலும் இவ்விடயம் வந்துக்கொண்டே தான் இருக்கும். இங்குள்ள சுகாதார மேற்பார்வையாளரை இவ்விடயத்திற்காக தான் வைத்துள்ளோமா என்று தெரியவில்லை. இதற்கொரு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நீர் விநியோக திட்டத்திலுள்ள குறைபாடுகளை கண்டறிய உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்றையாவது அமைக்கவும். இல்லாவிட்டால் ஒவ்வொரு மாதமும் இவ்விடயத்திற்கு ஒரு தொகையினை செலவழிக்க நேரிடும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

ஒவ்வொரு மாதமும் சாமிமலை நீர் விநியோக திட்டத்தில் பாரிய பிரச்சனை ஏற்படுகின்றது. நகரத்திலுள்ள கடைகளில் மக்களுக்கு பால்மா தராவிட்டால் அங்குள்ள 02 தோட்டத்து மக்களும் அங்குள்ள குழாய்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்துகின்றனர். கடந்த முறை “சப்பாணி ” என்ற நபரினூடாக 13,000.00 பெறுமதியான குழாயொன்று அட்டனில் இருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டது. கடந்த மாதம் 05 நாட்களாக நீர் இல்லை. அட்டனில் இருந்து பவுசரில் நீரினை கொண்டு வந்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 02 தோட்டத்து மக்கள் அப்பாதையினூடாக தான் செல்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், அங்குள்ள குழாய்களை தான் உடைக்கின்றனர். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்திலும் முறைபாடொன்றை செய்துள்ளோம். இல்லாவிட்டால் நீர் வழங்கல் அதிகார சபைக்கு இவ்விடயத்தை ஒப்படைக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்வேலைத்திட்டத்தை முழுமையாக செய்ய வேண்டுமானால் 50 இலட்சத்துக்கு மேல் செலவாகும். எனவே மதிப்பீடு செய்து உரிய இடங்களுக்கு அனுப்பியுள்ளோம். உடைக்க முடியாத குழாய்களையே உடைத்து வைத்துள்ளனர். தற்போது போட்டுள்ள குழாய்களை எப்போது உடைப்பார்கள் என்று தெரியவில்லை. நீர் விநியோகம் தடைப்படுவதனால் நகரத்தில் உள்ளவர்களுடனும் பிரச்சினை ஏற்படுகின்றது. அதன் காரணமாக தான் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டால் அவற்றை உடனடியாக திருத்தி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பொலிசிலும் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

மறைந்த கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஐயா அவர்கள் 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கி அந்த நீர் விநியோக திட்டத்தை பெற்றுக்கொடுத்தார். நகரத்திலுள்ள வர்த்தகர்களின் மீதுள்ள கோபம் காரணமாக தான் இவ்வாறு செய்கின்றனர் என்று எல்லாம் சொல்லுகின்றனர். எனவே இது தொடர்பாக மேல்மட்ட நடவடிக்கை ஒன்றை எடுக்குமாறு இந்த சபையினை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த 02 நாளைக்கு முன்பதாக நான் அங்கு சென்றிருந்தேன். அங்கு நாம் குழாய்களுக்கு அண்மையில் கொங்கிறீட் போட்டு மாற்று வழியினை செய்யலாம். நகரத்தில் சில பொருட்களை வைத்துக்கொண்டு மக்களுக்கு இல்லை என்கின்றார்களாம் அதன் காரணமாக தான் குழாய்களை உடைக்கின்றதாகவும் நான் கேள்விப்பட்டேன். தரப்பினரையும் அழைத்து பேசினால் நன்மையாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சற்று நேரத்திற்கு முன்பதாக தவிசாளர் அவர்கள் நிதிக்குழு நடைபெற்ற தினத்தன்று தவிசாளர் வேறொரு கூட்டத்திற்கு செல்லவிருந்தமையினால் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்கள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் நிதிக்குழு அறிக்கையில் வருகை தந்தோர் விபரத்தில் தவிசாளரின் பெயர் உள்ளது அது எப்படி வர முடியும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அறிக்கையில் அவ்விடயம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் கூட்டம் ஆரம்பிக்கும் போது நான் இருந்தேன், பின்னர் இடையில் தான் வேறொரு கூட்டத்திற்கு செல்லவிருந்தமையினால் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்களை நான் தான் குழுவின் தலைவராக நியமித்து விட்டு சென்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் எந்த விடயம் கலந்துரையாடும் போது தவிசாளர் அவர்கள் சென்றீர்கள் என்ற விடயம் அறிக்கையில் இல்லை. தவிசாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் ஏதாவது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அவ்விடயம் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டால் என்ன செய்வது? ஒன்று தாங்கள் வெளியேறிய நேரமாவது குறிப்பிட்டிருக்க வேண்டும் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மு.ப.11.45 அளவில் நான் குழுவிலிருந்து சென்றதாக அறிக்கையில் தெளிவாக உள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சாமிமலை நீர் விநியோகத்திட்டத்தினை பராமரிப்பது, ஏனைய அனைத்து வேலைகளையும் செய்வது கட்டணம் அறவிடுவது அனைத்துமே மஸ்கெலியா பிரதேச சபை தான். எனவே அங்குள்ள நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது எமது கடமை. கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன் கேள்வி எழுப்பியதற்கமைவாக, அறிக்கையில் 11.45 அளவில் தாங்கள் வேறொரு கூட்டத்திற்கு சென்றதாக தெளிவாக அறிக்கையில் உள்ளது. எனினும் இங்கு அறிக்கையில் உள்ள அனைத்து தீர்மானங்களையம் எடுக்கும் போது தவிசாளர் அவர்கள் இருந்தீர்களா? என்ற விடயம் தெரியவில்லை. தாங்கள் இல்லாத நேரத்தில் சபை நடவடிக்கைகோ அல்லது சபை விழுமியங்களுக்கோ அப்பாற்பட்ட ஏதாவதொரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அந்த நேரத்தில் என்ன செய்வது? சில விடயங்களை நிறைவேற்ற நிதிக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது தானே? எனவே எதிர்காலத்தில் தவிசாளர் குழு நேரத்தில் இருந்த விடயங்களை தனியாகவும் இல்லாத நேரத்தில் பேசப்பட்ட விடயங்களை தனியாகவும் குறிப்பிடவும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (ஐ.தே.க)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**<u>2022.02.08 நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் சபையில் பின்வருமாறு தீர்மானங்களா</u>க நிறைவேற்றப்பட்டது.**

**விடய இல 01**

ZB – 0394 இலக்கமுடைய கம்பெக்டர் வாகனத்திற்கான Tyre, Battery என்பவற்றை கொள்வனவு செய்யவும் Service செய்வதற்குமான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 04**

மேற்குறித்த கடிதத்திற்கு அமைவாக தொழிநுட்ப குழு உறுப்பினர்கள் வாகனத்தை பரிசீலனை செய்து வழங்கப்பட்ட சிபாரிசிற்கமைய கம்பெக்டர் வாகனத்திற்கான Tyre, Battery என்பவற்றை கொள்வனவு செய்யவும் Service செய்யவும் விலைமனு கோருவதற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 02**

மஸ்கெலியா பிரதேச சபையின் உரக்கடையினை விரிவாக்குவதற்காக விவசாய உபகரணங்கள், மர கன்றுகள், விதைகள் என்பவற்றை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 05**
மேற்குறிப்பிட்ட விடயத்திற்கு அமைவாக குறிப்பிட்ட பொருட்களை கொள்வனவு செய்ய விலைமனு கோருவதற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 03**
காரியாலயத்திற்கான சுவர் கடிகாரம் 02இனை பெற்றுக்கொள்வது தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 06**
காரியாலயத்திற்கான சுவர் கடிகாரங்களை பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 04**
RD – 1231 டிரக்டர் வாகனத்திற்கான Battery இனை மாற்றுதல் தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 07**
RD – 1231 டிரக்டர் வாகனத்திற்கான Battery இனை மாற்றுவதற்கும் தொழிநுட்ப குழுவிற்கு இவ்விடயத்தை முன்வைக்கவும் சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
2022ம் ஆண்டுக்கான மஸ்கெலியா பிரதேச சபையின் நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழு, சுற்றாடல் வாழ்வசதிகள் குழு, தொழிநுட்ப சேவைகள் குழு, வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு கூட்டங்கள் அனைத்திலும் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் மாத்திரமே இருப்பதனால் அனைத்து குழுக்களுக்கு வருகை தர வேண்டி உள்ளமையினாலும் குறித்த உறுப்பினர்களுக்கான மாதாந்த பிரயாண கொடுப்பனவில் 500.00ரூபாவினை அதிகரிக்க உள்ளூராட்சி துணை ஆணையாளரின் அனுமதியினை பெறுவது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 08**
மேற்குறித்த விடயத்தினை நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்திற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 06**
கௌரவ உறுப்பினர்களுக்கான காகிதாதிகள் பொருட்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது

**தீர்மான இல 09**

கௌரவ உறுப்பினர்களுக்கான கோரப்பட்ட காகிதாதி பொருட்களை பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 07**
மின் தொழிநுட்ப ஊழியர்களினால் பாதுகாப்பு சீருடைகள் (Safety Kits) கோரியுள்ள கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
மேற்குறித்த பொருட்களின் அவசியத்தன்மையினை கருத்திக்கொண்டு அவற்றை பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 08**

கௌரவ தவிசாளர் மற்றும் செயலாளர் அவர்களின் அறைகளுக்கான Calling Bell தொகுதிகளை பெற்றுக்கொள்வது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 11**
மேற்குறித்த விடயத்திற்கு அமைய Bell தொகுதிகளை பெற்றுக்கொடுக்க சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 09**
காரியாலயத்தினுள்ளே கண்காணிப்பு கமராக்களை பொருத்த கண்காணிப்பு கமராக்களை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது

**தீர்மான இல 12**
கண்காணிப்பு கமராக்கள் 04 இனை கொள்வனவு விலைமனு கோருவதற்கு சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

எனது முதலாவது பிரேரணையானது, நுவரெலியா மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள உப பிரதேச செயலகங்கள் தொடர்பானதாகும். நுவரெலியா மாவட்டத்தில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக வானொலி மூலமாகவும் தொலைகாட்சியினூடாகவும் நாம் அறியக்கூடியதாக உள்ளது. முன்னால் இருந்த காலஞ்சென்ற அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் காலகட்டத்தில் இருந்த ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் காலத்தில் எல்லை நிர்ணய சபையினூடாக பின்வரும் விடயங்களை, சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா அவர்களினூடாக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் நுவரெலியா மாவட்டத்திற்கு பல கிராம சேவகர் பிரிவுகள் உப கிளைகள் முன்வைக்கப்பட வேண்டும். பல்வேறுபட்ட காரியாலயங்கள் இங்கு கொண்டுவரப்பட வேண்டும் அந்த காரியாலயங்களில் கிராம சேவகர் உத்தியோகத்தர் பிரிவு மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படும் வேலைப்பளுவை குறைத்துக்கொள்ளும் நிமித்தமாக உப காரியாலயங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் போன்ற விடயங்களை மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப கொண்டு வர வேண்டும் என்று சந்திரிக்கா அம்மையாரின் காலக்கட்டத்தில் முன்வைக்கப்பட்டது, ஆனால் அப்போதிலிருந்தே அவ்விடயம் பிற்போடப்பட்டதாகவே காணப்பட்டது.

தற்போது இவ்விடயமானது 2012ம் ஆண்டு மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப இரண்டு இலட்சத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தாறு மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப துணை கிராம அலுவலகமாக 67 அலுவலகங்கள் நுவரெலியா மாவட்டத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. மக்கள் சனத்தொகைக்கு ஏற்ப இவ்விடயம் கொண்டுவரப்படப்பட்டுள்ளது, இதனடிப்படையில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 41ம் மற்றும் 95 உட்பட 1ம் இலக்க உறுப்புரிமைக்கு அமைய 2015.11.13ம் திகதி அன்று இவ்விடயம் எல்லை நிர்ணய சபையினூடாக எல்லை நிர்ணயமானது முறையாக குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட இடங்களுக்கு முறையாக சேவைகளை வழங்க வேண்டும் என்று எல்லை நிர்ணய சபையினால் ஒரு விடயம் கொண்டுவரப்பட்டது. அந்த காலக்கட்டத்தில் இருந்த மத்தியமாகாண உறுப்பினர் பிலிப்குமாரின் ஊடாக இவ்விடயம் முன்வைக்கப்பட்ட போது, இதற்கு முன்னால் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவத்திற்குரிய இராதாகிருஸ்ணண் அவர்களும்

இணைந்து இவ்விடயத்தை மும்முரமாக செய்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக உள்ளது. இவ்விடயங்கள் தான் உப காரியாலயங்களாக மாற்றப்பட்டு வருகின்றது. இந்த உப காரியாலயங்களினூடாக மலையகத்தில் முறையாக சேவைகளை செய்வதன் ஊடாக பிரதேச செயலகமாக அதனை மாற்றுவதில் பங்களிக்கும். எனவே இங்கு கொண்டு வரப்பட்டுள்ள உப காரியாலயங்கள் முறையாக செயற்பட்டு மக்கள் சேவைகள் சரியாக சென்றடைய வேண்டும் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கு இவ்விடயத்தை கவனத்திற்கு கொண்டு சென்ற போது மேற்படி உப காரியாலயங்கள் முறையாக செயற்படும் பட்சத்தில் இதுவரை காலத்தில் கிடைக்கப்பெறாமல் இருக்கின்ற காரியாலயங்கள் கிடைக்கப்பெறவும் தாம் ஆட்சியில் இருக்கும் காலகட்டத்தில் இக்காரியாலயங்களை பிரதேச செயலகங்களாக மாற்றி காட்டுவேன் என கூறியுள்ளார். இருந்த போதிலும் அரசாங்கத்தினூடாக பல்வேறுபட்ட வர்த்தமானிகள் வந்துகொண்டே தான் உள்ளன. முழுமையாக பிரதேச செயலகமாக இல்லாவிட்டாலும் உப காரியாலயமாவது கிடைக்கப்பெற்றமைக்காகவும் அதனை கொண்டு வந்தமைக்கு கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கும், நுவரெலியா அம்பகமுவ கோரளையின் தலைவராக இருக்கின்ற கௌரவ ராமேஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றிகளை கூறிக்கொள்வதோடு, இவ்விடயம் தொடர்பாக இங்குள்ள மக்களுக்கு முழுமையான சேவை கிடைக்கப்பெற வேண்டும், எதிர்காலத்தில் இது முழுமையான பிரதேச செயலகமாக மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு கடிதமனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த 07ம் திகதி நுவரெலியா அபிவிருத்தி குழு கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக பேசப்பட்டது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் அவர்களினூடாகவும் முன்னால் மத்தியமாகாண சபை உறுப்பினர் பிலிப்குமார் அவர்களிடம் தாங்கள் தானே இவ்விடயத்தை முன்வைத்தீர்கள் என்று

கேட்கப்பட்டது.இவ்விடயம் தொடர்பாக குழு ஒன்றை அமைக்கவும் கூறப்பட்டது. நாமும் இது தொடர்பாக கடிதம் அனுப்புவோம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போது பேசும் பொருளாக இருக்கின்ற விடயத்தையும், கிடைக்கப்பெற்றதை நியாயப்படுத்தி அது எதிர்காலத்தில் நியாயமாக கிடைக்க வேண்டும் என்று கௌரவ உறுப்பினர் கூறியதனை நான் வரவேற்றாலும் கூட, இலங்கை சனநாயக சோசலிச குடியரசினுடைய வர்த்தமானியினை இந்நாட்டில் அமுல்படுத்தும் ஒரு சட்டமாக தான் நாங்கள் பார்க்கின்றோம். அந்த சட்டம் நுவரெலியா மாவட்ட மக்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாக இல்லையா என்ற கேள்வியை ஏற்படுத்துகின்றது. காரணம் 1992ம் ஆண்டு 58ம் இலக்க அதிகாரம் ஒப்படைத்தல் பிரதேச செயலாளர்கள் சட்டம் 02ம் பிரிவின் கீழ் அமைத்து விதிகள் என்று கூறி வர்த்தமானி 2019.10.23ம் திகதி அப்போதிருந்த உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் வஜ்ஜிர அபேவர்தன அவர்களினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியினை சபைக்கு நான் சமர்ப்பிக்கின்றேன். முன்னால் உள்ளூராட்சிகள் மாகாண சபைகள் அமைச்சர் வஜ்ஜிர அபேவர்தன அவர்களினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைபத்திரம் வர்த்தமானி செய்யப்படுவதற்கு முன்னதாக அவர் சேர்ந்திருந்த காலி மாவட்டத்திற்கு மேலதிகமாக 02 பிரதேச செயலகங்கள் வேண்டுமென்பதை குறிப்பிட்டு வர்த்தமானி செய்யப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி காலியிலுள்ள பெருபான்மை இன சகோதரர்களுக்கு சாதகமானதாகவும் நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் வாழ்கின்றார்கள் என்பதற்காக 02ம் நிலை உப பிரதேச செயலகம் என்ற வகையில் வந்துள்ளது உண்மையில் தலைகுனிய வேண்டிய ஒரு விடயம். அந்தந்த காலகட்டத்தில் இருக்கும் அமைச்சர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரிகளின் அதிகார வலைக்குள் சிக்கி இதனை நாம் உப பிரதேச செயலகமாக பெற்றுள்ளதனை பிரச்சினையாக, அநீதியாக நாம் பார்க்கின்றோம். அதனடிப்படையில் தான் பல அமைப்புக்கள் மனித உரிமை அமைப்புக்களில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனை அமுல்படுத்தும் அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு தான் உள்ளது. மாவட்ட செயலாளரை நாங்கள் சந்தித்த போது, அரசாங்கம் ஒரு சுற்றுநிருபம் வெளியிட்டுள்ளதாம் எக்காரணம் கொண்டும். 336 பிரதேச செயலகங்களில் ஒன்றினை கூட அதிகரிக்க கூடாது என்று குறிப்பிட்டுள்ளதாக கூறினார். ஆனால் அதே நேரம் காலியில் அதிகரிக்கலாம். அம்பகமுவயில் 67 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. அதன் கீழ் எத்தனை குடும்பங்கள் உள்ளதென பார்ப்போம். அங்கிருக்கின்ற 300 குடும்பங்களுக்கு 01 கிராம சேவகர் பிரிவு உள்ளது. அங்குராங்கெத்த பிரதேச செயலகத்தின் கீழ் 128 குடும்பங்களுக்கு 01 கிராம சேவகர் பிரிவு உள்ளது. அன்று கிராம சேவகர் பிரிவினை அதிகரிப்பது தொடர்பாக எல்லை நிர்ணய சபையினால் ஒரு பரிந்துரை செய்துள்ளதாக பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது சாமிமலையிலே ஓல்டன் கிராம சேவகர் பிரிவு மாத்திரமே 02 ஆகவே உடைந்தது, ஏன் இவ்விடயம் தொடர்பாக எமது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மௌனம் காக்கின்றார்கள் என்று தெரியவில்லை. சாமிமலையில் எவ்வாறு ஓல்டன் கிராம சேவகர் பிரிவில் மக்கள் தொகை உள்ளதோ அதே அளவு தான் ஸ்ரஸ்பி பிரதேசத்திலும் உள்ளது. ஆனால் ஸ்ரஸ்பி, கவரவில ஆகியன 02 கிராம சேவகர் பிரிவுகளாக உடையவில்லை. பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவரின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு சென்றோம், அவரும் ஓல்டனையும் ஸ்ரஸ்பியினையும் உள்ளடக்குமாறு கூறியிருந்தார். 128 குடும்பங்களுள்ள அங்குராங்கெத்த பிரிவிற்கு 01 கிராம சேவகர் பிரிவினையும், 8000 சனத்தொகை இருக்கும் ஒரு கிராம சேகவர் பிரிவினை தான் 02 ஆக பிரிக்கலாமென பிரதேச செயலாளர் பதிலளிக்கின்றார். 128 குடும்பத்திற்கு 1 கிராம சேவகர் பிரிவு இருக்கலாம், இங்கு 4000 மக்கள் வாழும் கூட்டத்திற்கு 1 கிராம சேவகர் பிரிவு என்ற நடவடிக்கை உள்ளது. 14000 கணக்கிலான கிராம சேவகர் பிரிவில் 1 கிராமசேவகர் பிரிவினை அதிகரிக்க கூடாதென அரசாங்கம் கூறியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் வரவிருந்த பிரதேச செயலகங்களை தடுப்பதற்கான சுற்று நிருபமாக தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம். ஆகவே கௌரவ தலைவர் அவர்களே, கௌரவ உறுப்பினர் இப்பிரேரணையினை முன்வைத்து உப பிரதேச செயலகமாவது கிடைத்ததற்கு வாழ்த்து தெரிவிப்பது அது அவரின் கடமை அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரம் அந்த உப பிரதேச செயலகங்களில் கிடைக்கப்பெற போகின்ற சேவைகள் என்னவென்பதில் தான் பிரச்சினை உள்ளது. உதாரணமாக சாமிமலையில் பிரதேச சபையின் உப காரியாலயம் ஒன்றை அமைத்து விட்டு அங்கு செயலாளர் இருப்பாரா? இங்குள்ள அனைத்து நிர்வாக கட்டமைப்புகளும் இருக்குமா என்பது சந்தேகம் தான். நல்லாட்சி அரசாங்கம் கடைசி சந்தர்ப்பத்தில் கூட இந்த சமூகத்திற்கு 05 பிரதேச செயலகங்கள் வேண்டுமென வர்த்தமானி செய்யப்பட்டது தற்போது கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்கள் பிழை செய்துவிட்டார் என்றோ, அல்லது எதிரணியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பிழை செய்துவிட்டார்கள் என்பதனை அர்த்தப்படுத்துவது இல்லை. இது ஒட்டுமொத்தமாக எமது சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியாக தான் நாம் பார்க்கின்றோம். வானொலி நிகழ்ச்சி ஒன்றில் கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களிடம் இப்பிரதேச செயலகங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பிய போது, பிரதேச செயலகமாக வரவிருந்தது உப பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு ஒரு சொல்ல முடியாத பிரச்சினை உள்ளதென கூறியிருந்தார். மஸ்கெலியா பிரதேச சபையின் கீழ் பார்த்தாலும் இங்கு 02 இனத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் உள்ளோம். மஸ்கெலியா அதிகார பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இருக்கின்றனர். கௌரவ உறுப்பினர்கள் எஸ்.சுரேஸ்குமார், பி.ராஜ்குமார் ஆகியோர் அதிக தடவை சமுர்த்தி வங்கி தொடர்பாக பேசியுள்ளார்கள். முழுமையாக அது சமுர்த்தி வங்கியாக வந்தமையின் காரணமாக தான் நாம் தற்போது சந்தோசப்படுகின்றோம். அவ்வாறான விடயம் இதிலும் நடந்திருந்தால் நாமும் அவ்விடயத்தை

வரவேற்றிருப்போம். ஏற்கனவே செய்யப்பட்ட வர்த்தமானியினை கேள்விக்குட்படுத்தியுள்ள நிலையில், உள்ளூராட்சி மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அவர்கள் இதனை வர்த்தமானியில் உள்ளது போல பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு தான் நாம் நடவடிக்கை எடுக்க எடுக்க வேண்டுமே தவிர இதனை ஏதாவதொரு வகையில் ஏற்றக்கொண்டால் மீண்டும் இந்த உப பிரதேச செயலகங்கமாக மாற மீண்டும் ஒரு வர்த்தமானி வருவதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்று பிரச்சினை உள்ளது. எனவே காலத்தின் தேவை கருதி இவ்விடயங்களை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கிராம சேவகர் பிரிவுகள் மேலும் பிரிந்திருந்தால் அபிவிருத்தி பணிகளுக்காக எத்தனை மில்லியன் ரூபா நிதி வந்திருக்கும். அவர்களின் பிரேரணையினூடாக வாழ்த்து செய்தியினை அனுப்பும் அதேவேளை அந்த பிரேரணையின் கீழ் நானும் சில கருத்துக்களை முன்வைக்கின்றேன். இவ்விடயத்திற்கு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஜனக பண்டார தென்னக்கோன் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏதாவது ஒரு சேவைக்காக கோவையை நாங்கள் உப பிரதேச செயலகத்திற்கு கொண்டு சென்று அங்குள்ள உத்தியோகத்தர் அதனை கினிகத்தேனவிற்கு கொண்டுசெல்வதனை விட நேரடியாக பிரதேச செயலகத்திற்கு செல்லலாம், எனவே இந்த உப பிரதேச செயலகங்களை பிரதேச செயலகங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவே உரிய இடத்திற்கு இந்த வர்த்தமானியுடன் இணைத்து கடிதமொன்றை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

1979ம் ஆண்டு சாமிமலையில் அப்போதிருந்த அரசாங்கத்தினூடாக தபாலகமொன்று அமைத்து தரப்பட்டது, ஆனால் இன்று தபாலகமே இல்லை. இன்று 5500.00ரூபா மாத கூலி. அரசாங்கத்தினால் கட்டப்பட்ட கட்டிடம் தற்போது தனிநபருக்கு சொந்தமாகி விட்டது, அங்குள்ள சுற்று சூழலை எல்லாம் கோடிக்கணகான ரூபாய்க்கு விற்று விட்டார். பன்சலைக்கு முன்னுள்ள இடத்தைப்பற்றியும் சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து பேசி வருகின்றோம், இவ்விடம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான இடம். அவ்விடத்தையும் ஆக்கிரமித்துக்கொள்கின்றனர், அது தொடர்பாகவும் கடிதமனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பிரதேச செயலகங்கள் தொடர்பாக கடந்த 06 மாதத்திற்கு முன்பதாக முழு ஆவணப்படுத்தப்பட்ட விபரமும் முன்வைக்கப்பட்டு பிரேரணையினையும் முன்வைத்திருந்தேன், அது தொடர்பாக தாங்கள் சபையினூடாக கடிதமனுப்பியிருந்தீர்கள் அதற்கு பதில் கடிதம் கிடைக்கப்பெற்றதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை, இதுவரையில் கிடைக்கபெறவில்லை.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கிடைக்கப்பெற்ற சமுர்த்தி வங்கி தொடர்பாக பிரேரணையினை முன்வைக்கின்றேன். இந்த சபைக்கு வந்ததில் இருந்து கூறிக்கொண்டு வந்துள்ளோம். அண்மையில் இந்த சமுர்த்தி வங்கி கிடைக்கப்பெற்றது. இவ்வங்கி கிடைக்கப்பெற்றிருந்தாலும் இலங்கையின் கணக்காய்வு பிரிவின் ஊடாக வங்கிக்கு முழுமையான அதிகாரத்தை வழங்கவில்லை என்பது எனக்கு தெரியவந்தது. எனவே அதற்கான வேலைத்திட்டங்கள் செய்து தரப்படும். தொடர்ச்சியாக இந்த சமுரத்தி வங்கி முறையாக செயற்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். சமுர்த்தி பயனாளிகளுக்கு மேலதிகமாக 1000.00 வழங்கப்பட வேண்டும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்களினூடாக வர்த்தமானியினூடாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையான சமுரத்தி பயனாளிகள் யார் என்று தெரிந்தெடுப்பதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டும். வேலையற்றவர்கள் தான் சமுரத்தி பயனாளிகளாக இருக்க வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட முகாமையாளர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். சில சந்தர்ப்பங்களில் வங்கி நடவடிக்கைகளும் நடத்தி செல்ல தடையாக இருப்பது மக்களும் கூட என்பதனை கூறினார்கள். குழுவிலுள்ள நபர்கள் குழுவினூடாக முதல்களை பெற்றுக்கொண்டு அதனை திருப்பி செலுத்த மறுப்பு தெரிவிப்பதாக கூறப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடு நடைபெறுமானால் நாம் அனைவரும் இணைந்து இந்த வங்கியை கொண்டு வந்ததில் பயனில்லை. மக்கள் பக்கம் இந்த பிரச்சினையும் உள்ளது. எனவே உங்களது கிராம மட்டத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுமாறு கூறினார்கள். இவ்வாறான விடயங்கள் நடைபெறாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுமாறு கூறினார்கள். இவ்வாறான விடயங்கள் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இவ்விடயம் தொடர்பாக தாங்களினூடாக நடவடிக்கை எடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் அவர்கள் சமுர்த்தி வங்கி தொடர்பாக பிரேரணையினை கொண்டு வந்துள்ளார். இந்த சமுரத்தி வங்கி கிடைக்கப்பெற்றது உண்மையில் வரவேற்கதக்க விடயம், அதற்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த சமுர்த்தி வங்கி வந்ததன் பயனாக எமது சமூகத்தில் உள்ள

படித்தவர்கள் எத்தனை பேர் பயன்களை பெற்றுள்ளனர்? அங்கு ஏராளமான பதவி வெற்றிடங்கள் உள்ளன. மஸ்கெலியா பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் சிறப்பாக செயற்பட்டு கிட்டதட்ட 12 விருதுகளை பெற்றுள்ளார், அவருக்கு முகாமையாளர் பதவி கிடைப்பதனை தடுத்து வேறொரு பிரதேச சபையின் கீழ் உள்ள ஒருவரை முகாமையாளராக கொண்டு வந்த பெருமையும் இந்த மஸ்கெலியா பிரதேச அரசியலையே சாரும். படித்த பட்டதாரிகள் நிறைய பேர் எங்களது பிரதேசத்தில் உள்ளனர். எங்களது பிரதேசத்தில் வரும் இவ்வாறான விடயங்களை நாம் வேறு நபர்களுக்கு தாரைவார்த்து கொடுக்கின்றோம். இது அரசியல் பின்னடைவையே காட்டுகின்றது. இதனை எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாமல் இருக்க எங்களது பிரதேசத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து அவர்களுக்கான வேலைகளை பெற்றக்கொடுக்க வேண்டும். மஸ்கெலியா பிரதேச சபை ஆரம்பித்து 04 வருடங்களாகின்றது அதற்கிடைப்பட்ட காலத்தில் எத்தனை பேருக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுத்துள்ளோமென தெரியவில்லை. மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் நாங்கள் 16பேரும் ஒன்றிணைந்து குறைந்தது எமது பிரதேசத்திலுள்ள 10 பேருக்காவது அரசாங்க உத்தியோகத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கூறியது போல முகாமையாளர்களை சபையை கேட்டு போடவில்லை. அவர்களுக்கென நிர்வாகமொன்று உள்ளது அத்துடன் முகாமையாளராவதற்கென தகமைகளும் இருக்க வேண்டும். சில சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அரசியல் ரீதியாக செயற்படுவதற்கு நாம் எதுவுமே செய்ய முடியாது. அவர் சார்ந்தவராக இருந்தால் முத்திரை அட்டை வழங்குவார்கள் இல்லையென்றால் முத்திரை அட்டை இல்லை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முத்திரைக்கான ஆட்களை தெரிவு செய்வது சமுர்த்தி உத்தியோகத்தர் இல்லை. அவரை விட்டு விடுவோம் அவர் இல்லாமல் எமது பிரதேசத்தில் சமுரத்தி உத்தியோகத்தர்கள் உள்ளனர் தானே? அவர்களுக்கு முகாமையாளர் பதவியினை பெற்றுக்கொடுத்திருக்கலாம் தானே?

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

சீத்தகங்குல மற்றும் மறே வட்டாரத்திற்கும் கடந்த காலங்களில் 02 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இருந்தார்கள். ரிக்காடன், நல்லதண்ணி, பிட்டன் ஆகிய 03 பகுதிக்கும் ஒரு சமுர்த்தி உத்தியோகத்தர் இருந்தார். அவரும் தற்போது இடமாற்றம் பெற்று சென்று விட்டார். தற்போது 03 பகுதிகளுக்கு ஒரு சமுரத்தி உத்தியோகத்தர் மாத்திரமே உள்ளார். எனவே 2500 குடும்பங்கள் 550 பயனாளிகள் உள்ளனர். எனவே சமுர்த்தி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுத்தந்தால் நன்மையாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

சமுர்த்தி நிர்வாக உத்தியோகத்தர்கள் தொடர்பான விடயத்திற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது, இருப்பினும் தகுதியானவர்கள் இருப்பின் அவர்களுக்கான பதவிகள் கிடைக்கப்பெற வேண்டும். அவ்வாறாக நியமனம் பெறுவார்களாயின் நன்மையான அமையும். அடுத்ததாக நல்லதண்ணியில் இருக்கின்ற வாகனத்தரிப்பிடம் தொடர்பான பிரேரணையினை முன்வைக்கலாமென நினைக்கின்றேன். மறே, வாழமலை, பிரதேசங்களை சேர்ந்த சுமார் 15 வேன்கள் காணப்படுகின்றது. அவ்வேன்களுக்கான தரிப்பிடம் தொடர்பான விடயத்திற்கு தவிசாளர் அவர்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தோம். இது தொடர்பாக முன்னால் கௌரவ அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் கவனத்தின் கீழ் கொண்டு சென்றபோது அவர் இது தொடர்பாக தாங்களுக்கு தெரியப்படுத்தி நுவரெலியா மாவட்ட செயலாளருக்கு முறையான அறிவித்தல் கொடுக்கப்பட்டு முறையான நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தார். எனவே தற்போது இவ்விடயத்திற்காக என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதற்கான தவிசாளர் அவர்களின் விளக்கமொன்றை எதிர்பார்க்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக அந்த இளைஞர்களுடன் கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களை சந்தித்திருந்த போது, அவர் முன்னால் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் அவரகளை அனுப்பி அவர்களுக்கு 05 வாகனங்களை தரித்து வைப்பதற்கான இடத்தை ஒதுக்கிக்கொடுத்திருந்தோம். அவ்விடத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவர்களது கடமை. அதனை அவர்கள் தவறிவிட்டார்கள். நாம் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

அவ்விடத்தில் வாகனத்தை தரித்து வைத்தால் ஆளுக்கு ஆள், அவ்விடத்தை வாகனத்தை தரித்து வைப்பதனால் அவர்களது வியாபாரம் தடைபடுகின்றது பாதாசாரிகள் நடக்க இடமில்லை என்று காரணம் கூறுகின்றனர். இதனால் எவ்விடத்திலும் வாகனத்தை தரித்து வைக்க முடியாத நிலை உள்ளது. எனவே தவிசாளர் அவர்களே இவ்விடயத்திற்கு நல்லவொரு முடிவை பெற்றுத்தரவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நல்லவொரு முடிவை தாங்களை வைத்து தான் கொடுத்தோம், தனிநபர் ஒருவர் அவ்விடத்தில் உரிமை கோரினால் வாகன சாரதிகளும் பேச வேண்டும் தானே? அது அவரது இடம் இல்லையே. மறைந்த கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களும் அவ்விடத்தை வந்து பார்த்துவிட்டு, தற்போதுள்ள கௌரவ இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களும் வந்து பார்த்து அவர்களுக்கு கொடுக்க வேண்டிய இடத்தை கொடுத்துள்ளோம். அதனை பாதுகாக்க வேண்டியது அவர்களது பொறுப்பு.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

வேறொரு இடமொன்றையாவது தற்போது பெற்றுத்தருமாறு தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நேற்று இது தொடர்பாக நானும், செயலாளரும், விசாரணை அதிகாரியோடு கலந்துரையாடியிருந்தோம். சிவனொளிபாதமலையை பொருத்த வரையில் கழிவு முகாமைத்துவம் செய்வதற்கு மாத்திரமே அதிகாரமுள்ளது என்று கூறினார். இந்த வாகன தரிப்பிடம் தொடர்பாக 05,06 வருடங்களாக பேசிவருகின்றோம். அங்குள்ள வாகன சாரதிகள் அனைவருமே எமது பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தான் ஏன் எங்களால் அங்கு ஒரு 05 வாகனத்தை நிறுத்தி வைக்க ஒரு பெயர்பலகை வைத்து தரமுடியவில்லை. அதேபோல தான் முச்சக்கரவண்டி சாரதிகளும் உள்ளனர். வாழ்வாதாரத்திற்கு அவர்கள் என்ன செய்வார்கள்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியா நகரத்திலுள்ள வாகன தரிப்பிடம் தொடர்பான அனைத்து அதிகாரமும் சபைக்கு உள்ளது. ஆனால் இது தொடர்பாக என்றாவது பேசியுள்ளோமா? அதே பிரச்சினை மஸ்கெலியா நகரிலும் உள்ளது. தரிப்பிடத்திலுள்ளவர்கள் எங்களை பதிவு செய்து தரும்படி கேட்கின்றனர். சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து எத்தனை வாகனங்களை பதிவு செய்துள்ளோம்? நல்லதண்ணி வாகன தரிப்பிடம் தொடர்பாக அனைவரும் சென்று இடத்தை அளந்து எல்லாம் கொடுத்து விட்டு வந்தோம். ஆனால் அடுத்த நாளே அவ்விடம் தனியாருக்கு கையகப்படுத்தப்பட்டது. நல்லதண்ணியிலுள்ள நபர் பகிரங்கமாக அவ்விடத்தை கையகப்படுத்தி கொங்கிரீட் போட்டு கையகப்படுத்தியுள்ளார். அதற்கு எமது அலுவலகத்தில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா? முதலில் மஸ்கெலியா நகரிலுள்ள வாகனத்தரிப்பிடத்தை பாதுகாக்கவும் வாகனங்களை பதிவு செய்து சபைக்கு பெற வேண்டிய வருமானங்களை பெறவும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அமரத்துவம் அடைந்த ஐயா ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் காலத்தில் இருந்த தவிசாளர் நகுலேஸ்வரன் அவர்களும் இணைந்து இடத்தை ஒதுக்கிக்கொடுத்தார்கள், நாங்கள் இந்த சபையில் அதனை இல்லாமலாக்கி விட்டோம். வழமையாக உள்ள வாகன சாரதிகள் தான் உள்ளனர். இதுவரையிலும் எந்த பதிவிலும் இல்லையே. முச்சக்கரவண்டி பதிவிலும் குழப்பம் உள்ளது. அன்று நடந்த கிரிக்கட் போட்டியும் கூட இதனால் பிரச்சினை ஏற்பட்டது. 15பேரை புதிதாக போட்டு விட்டு பின்னர் அவர்களை இரத்து செய்வதாக கூறப்பட்டது, ஆனால் அதில் இன்னும் 10 பேர் வாகனத்தரிப்பிடத்தில் முச்சக்கரவண்டிகளை தரித்து தான் வைக்கின்றனர், அவ்வாறு அவற்றை இரத்து செய்திருந்தால் இரத்து செய்ததற்கான ஆதாரம் எங்கே? கடிதம் அனுப்பியுள்ளோமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையில் மீண்டும் தீர்மானமெடுத்து ஏற்கனவே புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட முச்சக்கர வண்டிகளின் பதிவுகளை இரத்து செய்ய கூறியிருந்தோம். கடைசி வருடம் பற்றுச்சீட்டு உடைக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அவர்களின் முச்சக்கரவண்டி பதிவுகளை இரத்து செய்து கடிதம் அனுப்ப வேண்டும். அப்போது தானே அவர்களுக்கு தெரியும். 15 பேருக்கு 50,000.00ரூபா படி 750,000.00ரூபா சபையில் வாங்கப்பட்டுள்ளது இதனை ஏற்றுக்கொண்டால் கடிதம் அனுப்பாதீர்கள், ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் கடிதம் அனுப்புங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

03 சபைகளில் தொடர்ந்து முச்சக்கரவண்டி தொடர்பாக தான் பேசப்பட்டது, பின்னர் தான் அவற்றை இரத்து செய்ய கூறப்பட்டது, அவ்வாறு 50,000.00 யாரும் பெற்றிருந்தால் உரிய நபர்களை இலஞ்ச ஊழல் பிரிவிற்கு அனுப்பி வைக்க சொல்லுங்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முதலில் அம்முச்சக்கரவண்டிகளை இரத்து செய்யுமாறு கடிதமொன்றை மட்டும் அனுப்புங்கள் அப்போது விடயம் தானாக வெளியில் வரும். அதன் பின்னர் நானே விபரங்களை எடுத்து தருகின்றேன். லொறி தரிப்பிடத்திலும் பிரச்சினை உள்ளது. முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் எத்தனை முச்சக்கர வண்டிகள் உள்ளன என்பவற்றை குறிப்பிட்டு பெயர்பலகையினை காட்சிப்படுத்துமாறு கூறியிருந்தோம், அதையும் செய்யவில்லை. இன்னும் அம்பகமுவ பிரதேச சபையிலுள்ள பெயர்பலகை தான் உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை மாற்றப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வாகன தரிப்பிட விடயங்கள் தொடர்பாக சற்று கவனம் செலுத்துமாறு தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன். நல்லதண்ணி வாகன தரிப்பிடம் தொடர்பாகவும் ஒரு முடிவுக்கு வரவும்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையிலே நான் 20 வருடங்களாக மஸ்கெலியா வாகன தரிப்பிடத்தில் ஒரு சாரதியாக கடமை புரிந்துள்ளேன். முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை மஸ்கெலியா பிரதேச சபைக்கு வந்ததன் பின்னர் வேன், லொறி, தரிப்பிடங்கள் பதிவு செய்யப்படவில்லை. வருமானம் இல்லை, வருமானம் இல்லை என நாம் தினந்தோறும் சபையிலே கூறுகின்றோம். இருப்பினும் வருமானம் பெறக்கூடிய இடங்களில் இருந்து நாம் வருமானத்தை பெறுவதில்லை. அந்த நாட்களில் 16,18,20 என்ற அளவில் காணப்பட்டது. தற்போது 30,35 வாகனங்கள் காணப்படுகின்றன. அப்படியானால் அங்கே ஒரு வாகன சாரதி என்ற வகையில் கூலிக்கு வாகனத்தை செலுத்தி வாழ்க்கையை கொண்டு நடத்திய நிலையில் தற்போது வருமானமின்றி காணப்படுகின்றனர். அனைத்து வாகனங்களும் அங்கே வந்து தரிக்கப்படுகின்றது. அங்கே ஒரு கட்டுப்பாடும் இல்லை. எதுவித பதிவுகளும் இல்லை. அதனால் சிவனொளிபாத யாத்திரை காலத்தில் நல்லதண்ணியை அண்டிய வாகன சாரதிகள் நல்லதண்ணிக்கு சென்று ஓடுகின்றனர், ஓடும் போது தான் பிரச்சினை ஏற்படுகின்றது. அங்கே 06 மாதங்கள் முடிந்தவுடன் நேரே மஸ்கெலியாவிற்கு வருகின்றனர். அதன் பின்னர் மஸ்கெலியாவில் பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே ஒரு முறையான திட்டத்தின் கீழ் அப்பிரதேசத்தை அண்டிய சாரதிகளுக்கு அங்கே அனுமதியை பெற்றுக்கொடுங்கள். இப்பிரதேசத்திலுள்ள சாரதிகளுக்கு இங்கே சட்டப்படி பதிவு செய்துக்கொடுத்தால். பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும். நாங்கள் கதைப்பது மாத்திரம் தான். வேலை செய்வதில்லை. வேலை செய்யாததால் தான் எல்லா இடங்களிலும் பிரச்சினை தோன்றுகின்றது. உரிய விடயத்திற்கு பொறுப்பான அதிகாரியை அழைத்து வந்து ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கேளுங்கள். புதிதாக வாகனங்கள் வந்துள்ளதா என எந்த நாட்களிலும் சென்று வாகனத்தரிப்பிடத்தை பாருங்கள். எம்மால் தான் இந்த வருமான வரிகள் இல்லாமல் போயுள்ளது. உண்மையிலேயே கடந்த 05 வருடங்களாக வாகனப்பதிவு கட்டணம் சபைக்கு இல்லாமல் போயுள்ளது. தற்போது நேரடியான 05 வருடங்கள் தாங்கள் பதிவு கட்டணம் செலுத்தப்படவில்லை, அவற்றை மொத்தமாக செலுத்த வேண்டும் என்றால் அதை செய்ய முடியாது, எனவே நியாயமான தீர்விற்கு சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

மத்திய மாகாணத்தில் வழங்கப்பட்ட ஆசிரியர் நியனங்கள் தொடர்பாக சில பிரச்சினைகள் உள்ளன. ஒரு ஆசிரியர் பாதிப்படைவராயின் அவருடைய தாக்கம் அவ்வகுப்பில் இருக்கும் முழு மாணவர்களையும் பாதிக்கும். வெறுமனே 10,000.00 சம்பளத்திற்கு உதவி ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். 5,6 வருடங்களாக அவ்வாறாகவே இருக்கின்றார்கள். மத்திய மாகாணத்தில் மாத்திரம் தான் இந்த பிரச்சினை தற்போது சகல அரச ஊழியர்களுக்கும் 5000.00ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. அந்த கொடுப்பனவு கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே அவர்களுக்கான சம்பளப்பிரச்சினை தொடர்பான விடயங்களை உடனடியாக

தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், இதனை நம்மூடாக செய்ய முடியாது, எனினும் இது தொடர்பாக கௌரவ இராஜாங்க அமைச்சருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது இதற்கு உரிய நடவடிக்கை எடுப்போமென கூறியுள்ளார். இது தொடர்பாக மத்திய மாகாண ஆளுனருக்கு அழுத்தமொன்றை கொடுத்தால் இவ்விடயம் நடைமுறைக்கு வரும். இதில் எமது பிரதேசத்தில் உள்ளவர்களும் 120 பேர் இருக்கின்றார்கள், முழு மத்தியமாகாணத்தில் 346 பேர். கட்டாயம் இவர்களுக்கான தயரமுயர்த்தல் செய்யப்பட வேண்டும். எனவே இதற்கு சபையினூடாக உரிய கடிதங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, இது தொடர்பாக குழுவொன்று அமைத்து செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றனர். விரைவில் இவற்றுக்கான நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்வளவு நேரமும் நான் சமர்ப்பித்திருந்த பிரேரணைகள் தொடர்பாக தான் சபையில் பேசப்பட்டது. இம்முறை ஏன் இவ்வாறு நடந்ததென்று தெரியவில்லை. ஒரு உறுப்பினர் முன்வைத்த பிரேரணையே இன்னொரு உறுப்பினரும் முன்வைக்க முடியுமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இருவரின் பிரேரணைகளில் இருந்த சொற்கள் எல்லாம் வித்தியாசமாக இருந்ததனாலும், ஒருவரின் பிரேரணையினை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கிவிட்டு இன்னொருவரின் பிரேரணையினை உள்ளடக்காமல் இருந்தால் அதுவும் சிக்கல் என்பதனால் 02யையும் இணைத்துக்கொண்டோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

02பேரின் பிரேரணையின் கருத்தும் கிட்டத்தட்ட ஒரேமாதிரி தான் உள்ளது. இருந்தாலும் பரவாயில்லை. நீண்ட நாட்களாக சபை வலியுறுத்தியதற்கு அமைவாக தான் இந்த சமுர்த்தி வங்கி கிடைத்தது. இது முழுமையான சமுர்த்தி வங்கியா அல்லது உபகாரியாலயம் போன்று அமைக்கப்பட்டதா என்று தெரியாது, அண்மையில் சில வேலைகளுக்காக சிலர் இந்த வங்கிக்கு சென்றிருந்தனர்., எனினும் அவர்கள் தொடர்பு கொண்டது நோர்வூட் இல் உள்ள சமுர்த்தி வங்கியினூடாக மக்களுக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பாக தான் பேசவுள்ளேன். வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு வாழ்க்கையை முன்கொண்டு செல்ல நிவாரணத்தை வழங்க தான் இந்த சமுர்த்தி வங்கி உள்ளது. ஆனால் இங்கு சமுர்த்தி நிவாரணம் பெறும் ஒருவருக்கு இலகு கொடுப்பனவு முறையில் பொருட்கள் வழங்கப்படுகின்றது, மற்றும் கடன் வழங்கப்படுகின்றது, இந்த கடனை அறவிடவே சமுர்த்தி நிவாரணம் பயன்படுகின்றது. வட்டி வீதமும் அதிகம். நுண்நிதி கடன் திட்டத்தை விட மிக மோசமான வகையில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நடந்துக்கொள்கின்றனர். கடனை அறவிட ஒரு முறை உள்ளது. ஆனால் சமுர்த்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடனை மீள பெற அறிவித்தல் ஒன்று வழங்கப்படுகின்றது. அந்த கடிதத்தை சட்டதரணி ஊடாக வழங்கப்படுகின்றது, கடிதத்தை தயார்படுத்தியமைக்கு அவர்களிடம் 500.00 பெற்றுக்கொண்டு தான் கடிதம் வழங்கப்படுகின்றது. அக்கடிதத்தின் அடிப்பகுதியில் கடனை திருப்பி செலுத்தும் வரை வீட்டின் கதவில் இருந்து இக்கடிதத்தை அகற்ற கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண மக்களிடம் தான் இவ்வாறு செய்கின்றனர். இது எவ்வளவு தூரம் அவமானப்படுத்தும் விடயம், அண்மையில் வடகிழக்கு பிரதேசத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை அடித்து கொன்றனர். அவர் பாலியல் இலஞ்சம் கேட்டதன் காரணமாகவே அவ்வாறு செய்துள்ளனர். பெரும் கஸ்டத்துக்கு மத்தியில் கடன் கட்டுகின்றனர். இவ்வாறெல்லாம் செய்வதானால் அந்த வங்கியே தேவையில்லை. அண்மையில் அரசாங்கத்தினால் கமசந்தர பிளிசந்திர வேலைத்திட்டத்தினூடாக 30 இலட்சம் ரூபா ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒதுக்கப்பட்டது, அதில் வீட்டு கடை அமைப்பதற்கான சில நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பெண்மணியினை கிராமிய கமிட்டி மூலம் தெரிவு செய்துள்ளதாகவும் இந்த கடை வேண்டுமானால் திரியமாதா என்ற திட்டத்தின் கீழ் தாங்கள் 80,000.00 வைப்பு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவர்களும் நகைகளை அடகு வைத்து அத்தொகையை கட்டியுள்ளனர். கடைசியில் அப்பெண்மணிக்கு கடை கிடைக்கவில்லை. இவற்றையெல்லாம் அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வர வேண்டும். இவ்விடயம் சமுர்த்தி திணைக்களத்திற்கு உடனடியாக கொண்டு செல்ல வேண்டும். சமுர்த்தி கடன் பெற்றவர்களுக்கு ஏனைய ஏனைய இடங்களில் போல நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

அடுத்ததாக எனது உப செயலகம் தொடர்பான பிரேரணை தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள் சற்று முன் நிறைய விடயங்களை முன்வைத்திருந்தனர். உப செயலகங்கள் வந்துவிட்டன என்று நாம் சந்தோசப்படும் நிலையில் நாம் இல்லை. நுவரெலியா மாவட்டத்திற்கென 05 பிரதேச செயலகங்கள் கேட்கப்பட்டு அவை வர்த்தமானியினூடாகவும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதே நேரம் காலியிலும் 03 பிரதேச செயலகங்களை குறிப்பிட்டு அதே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அங்கே அவை பிரதேச செயலகங்களாக

அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக வேதனைப்படுகின்றோம். இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி 13ம் சீர்திருத்தம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 13ம் சீர்திருத்தத்தின் பின்னர் தான் மாகாண சபைகளுக்கு இலகுவாக வேலை செய்யும் முகமாக பிரசே சபைகள் அமைக்கப்பட்டன. பிரதேச சபைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டன. 1987ம் ஆண்டுக்கு முன் பிரதேச சபைகளென்ற ஒன்று இல்லை. இது எமக்கு இழைக்கப்பட்ட அநீதி. தொடர்ந்து இவ்வாறான விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே வர்த்தமானி செய்யப்பட்டது போல பிரதேச செயலகங்கள் முழுமையாக வேண்டும். எனவே இப்பிரேரணையினை சபை ஏற்றுக்கொண்டு அரசாங்கத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அடுத்ததாக இறுதியான எனது பிரேரணை, கடந்த வரவு செலவு திட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 5000.00 கொடுப்பனவும் தோட்ட தொழிலாளிகளுக்கு 15 கிலோ கிராம் கோதுமை மா வழங்குவதாக கூறப்பட்டது. அரசாங்க ஊழியர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தான் தோட்ட தொழிலாளர்களும் இந்நாட்டின் பிரஜைகள் தான் 02 முறையில் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். 15 கிலோ கிராம் கோதுமை மா கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது, எத்தனை தோட்டங்களுக்கு இந்த கோதுமை மா வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை. மலையகத்தை சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஏன் அமைதியாக உள்ளனர் என்று தெரியவில்லை. தற்போது கோதுமை மா தட்டுபாடாகவும் உள்ளது. இவ்வாறான ஏமாற்று வேலைகளை மலையக மக்கள் மீது திணித்து அவர்களை பழிவாங்கும் நோக்கத்தை தவிர்த்து இவர்களும் நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்களை முறையாக பெற்றுத்தர வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கூறிய கோதுமை மா வழங்குவது தொடர்பாக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது கிடைக்காமல் இருக்காது கிடைக்கும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் கொண்டு வந்த பிரதேச செயலகங்கள் தொடர்பான பிரேரணை தொடர்பாகவும் ஏனைய பிரேரணை தொடர்பான விடயங்களுக்கான தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை, கடிதமனுப்புமாறு கௌரவ உறுப்பினர் கேட்டுக்கொண்டார். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு கடிதங்களை அனுப்பவும். அவர் முன்மொழிந்த விடயத்தை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 04**

பிரதேச செயலகங்கள் தொடர்பான விடயம் தொடர்பாக உரிய இடத்திற்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

சமுர்த்தி வங்கி தொடர்பாக மக்கள் யாரும் பாதிக்கப்பட்டிருந்தால் கடிதம் மூலமாக அவர்கள் வழங்கினால் நடவடிக்கை எடுக்கலாம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கிளண்டில் பிரதேசத்தில் எமது சபையினூடாக வேலைத்திட்டம் செய்யப்படுகின்றதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஆனால் சபையின் ஊழியர்கள் அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர், நான் ஆதாரத்துடன் தருகின்றேன். எனது பிரேரணையானது மஸ்கெலியா பிரதேசத்திற்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை பெற்றுத்தருமாறு கடிதமனுப்பவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

டீசைட் பிரதேசத்தில் உள்ள தோட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இவ்விடயத்திற்கு பொருத்தமானவராக உள்ளார். அவரின் விபரங்களை உரிய இடத்திற்கு அனுப்பியுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இது தொடர்பான 02 தகுதியான நபர்கள் உள்ளனர். ஒரு வீட்டில் 55,65,75 வயது இடைவெளிகளில் உள்ள முதியவர்கள் யாரும் மரணித்தால் அவர்களை மரண பரிசோதனைக்கு மஸ்கெலியாவிற்கு அனுப்பி அங்கு உரிய அதிகாரிகள் இன்மையினால் கிளங்கனுக்கு அனுப்புகின்றனர். இதனால் மரண சடங்குகள் மிகவும் தாமதப்படுகின்றது. எனவே இவ்விடயம் தொடர்பாக பிரதேச வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கும் கடிதம் அனுப்பவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக கேட்டேன் முடியாது என்று கூறிவிட்டார்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மக்கள் பாவம் தானே வயதானவர்கள் இறந்தால் தோட்ட வைத்திய அதிகாரியின் சிபாரிசுடன் இறுதி கிரிகையை நடத்த கடிதம் அனுப்பவும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியாவில் என்டிஜன் பரிசோதனையாவது செய்தால் இலகுவாக இருக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**